

₹100/-
ஞானகுரு
மகிழ்ச்சி
5 - 10
அக்டோபர் 2026
எஸ்.கே.முருகன்
காதல்
என்பது
உயிர்
குடிக்கும்
மிருகம்






ஆசிரியர் பக்கம்

# கடல் போல் மனதில் அலையடிக்கட்டும்.



கடல் என்றதும் பரந்து விரிந்த பிரமாண்டம் கண்ணுக்குள் தெரியும். அழகான நீல நிறக் கடலுக்கு ஒரு விசித்திர குணம் உண்டு. உயிருள்ள அனைத்தையும் கடல் தனக்குள் பத்திரமாக வைத்துக் கொள்ளும். உயிர் இல்லாதவற்றை கரையில் கொண்டு வந்து தள்ளிவிடும். மனிதர்கள் கடலில் குப்பைகளை கொட்டலாம், அசுத்தம் செய்யலாம். ஆனால் கடல் அவற்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. அலைகளின் வழியாக எல்லா குப்பைகளையும் கரைக்குத் தள்ளிவிடுகிறது.

நல்லதை ஏற்றுக்கொண்டு கெட்டதை வெளியே தள்ளும் கடலாக மனதை மாற்றுங்கள். ஏனென்றால் சிலர் நம் மீது கோபம், வெறுப்பு, அவமதிப்பு, ஏமாற்றம் போன்ற உணர்வுகளை கொட்டிவிட்டுச் செல்வார்கள். மனதைக் காயப்படுத்தும் அந்த உணர்வுகளை அப்படியே மனதுக்குள் வைத்திருந்தால் வேதனையும் வலியும் மன அழுத்தமும் அதிகரித்துக்கொண்டே போகும். எனவே, அவற்றை எல்லாம் குப்பையாக நினைத்து வெளியே வீசிவிட்டால் மனமும் கடல் போலத் தூய்மையாக மாறிவிடும்.

கடல் அமைதியாகத் தோன்றினாலும், அது எப்போதும் இயங்கிக்கொண்டே இருக்கும். அலைகள் தொடர்ந்து கரையைத் தொடுகின்றன. தனக்கு தேவையில்லாத எல்லாவற்றையும் வெளியே தள்ளுகின்றன. அதேபோல் நமது மனதிலும் வெளியேற்றும் சக்தி இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும். கோபம் வந்தால் மனதில் வைத்திருக்காமல் சரியான வழியில் வெளியேற்ற வேண்டும். துக்கம் வந்தால் அழுது வெளியேற்ற வேண்டும். நம்பிக்கைத் துரோகத்தை மன்னித்து வெளியேற்றலாம். உடலைத் தூய்மைப்படுத்துவது போன்று தினமும் மனதையும் தூய்மைப்படுத்துங்கள்.

அன்பை வைத்துக்கொள்ளுங்கள். நல்ல நினைவுகளை வைத்துக்கொள்ளுங்கள். நம்பிக்கையை வைத்துக்கொள்ளுங்கள். மகிழ்ச்சியை வைத்துக்கொள்ளுங்கள்.

கோபம், வெறுப்பு, அவமானம், துரோகம், பொறாமை, கசப்பு போன்ற மனக்குப்பைகளை வெளியே வீசுங்கள். வாழ்க்கை கடல் போல் ஆழமாகவும் அழகாகவும் மாறிவிடும். மகிழ்ச்சியுடன் வாழுங்கள்.

# கடவுளுக்கு நான்கு கேள்விகள்

## எபிகுரஸ் எனும் தத்துவஞானி

மகிழ்ச்சியைத் தேட கற்றுக்கொடுத்த கிரேக்கத் தத்துவஞானி என்று போற்றப்படுபவர் கிரேக்கத்தைச் சேர்ந்த எபிகுரஸ். இவரது காலம் கி.மு. 341-270. இவரது கருத்துப்படி, வாழ்க்கையின் உயர்வான இலக்கு என்பது மகிழ்ச்சியாக வாழ்வதுதான். அதற்கு தெளிவான வழி காட்டுகிறார்.

மகிழ்ச்சி என்பது ஆடம்பரத்திலும் அளவுக்கு மீறிய ஆசைகளிலும் இல்லை. மனக்குழப்பம் இல்லாத அமைதி, உடல் வலி இல்லாத ஆரோக்கியம், பயமில்லாத வாழ்க்கை, நல்ல நண்பர்கள், எளிமையான வாழ்க்கையே உண்மையான மகிழ்ச்சி என்கிறார். எபிகுரஸ் காட்டிய வாழ்க்கைத் தத்துவத்தை சுருக்கமாகப் பார்க்கலாம்.

1. குறைவாக விரும்பினால், அதிகமாக மகிழலாம்

எவ்வளவு இருக்கிறது என்பதைவிட, எவ்வளவு வேண்டும் என்பதுதான் மகிழ்ச்சியை தீர்மானிக்கிறது. 50 லட்சம் வைத்திருப்பவர் 1 கோடிக்கு ஆசைப் பட்டால், அவர் ஏழை. அதேநேரம், 100 ரூபாய் வைத்திருப்பவர், இது போதும் என்று நினைத்தால், அவர் செல்வந்தர். அதிகம் வைத்திருப்பது செல்வம் அல்ல, குறைவான தேவைகளுடன் நிறைவாக வாழ்வதுதான் மகிழ்ச்சி.




www.gyaanaguru.com

# 4 கேள்விகள்



**2. மூன்று வகை ஆசைகள்**

எபிகுரஸ் ஆசைகளை மூன்று வகைகளாகப் பிரித்தார். உணவு, தண்ணீர், உறக்கம், பாதுகாப்பு போன்றவை அத்தியாவசிய ஆசைகள். சிறந்த உணவு, ஆடம்பர வசதிகள் போன்றவை அவசியமில்லாத ஆசைகள். அளவில்லாத பணம், அதிகாரம், புகழ், சமூக அங்கீகாரம் போன்றவற்றை வீண் ஆசைகள். முதல் வகை ஆசைகளை நிறைவேற்றுவது வாழ்க்கைக்கு அவசியம். ஆனால் மூன்றாவது வகை ஆசைகளுக்கு முடிவே கிடையாது.

**3. மரணத்தை அழித்துவிடுங்கள்.**

மரணம் பற்றிய எண்ணமே அவசியமில்லை என்கிறார் எபிகுரஸ். ஏனென்றால் உயிருடன் இருக்கும் போது மரணம் இல்லை, மரணம் வந்துவிட்டால் நாம் இல்லை. அதனால், மரண பயத்தில் வாழ்வது, நிகழாத ஒன்றை நினைத்து துன்பப்படும் நிலை என்கிறார்.

**4. கடவுள் தேவையில்லை**

எபிகுரஸ் வாழ்ந்த காலத்தில் கடவுள்களின் கோபம், தண்டனை, மறுமை போன்ற நம்பிக்கைகள் மனிதர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கம் ஏற்படுத்தின. எபிகுரஸ், மனிதன் கடவுள்களைப் பற்றிய அச்சத்தில் வாழக்கூடாது என்று வலியுறுத்தினார்.

**5. நட்பு மிகப்பெரும் மகிழ்ச்சி**

எபிகுரஸின் தத்துவத்தில் நட்புக்கு மிக உயர்ந்த இடம் உண்டு. நல்ல நண்பர்கள் துன்பத்தில் துணையாக இருப்பார்கள். பயத்தை குறைப்பார்கள். வாழ்க்கைக்கு அர்த்தம் தருவார்கள். தனிமையை உடைப்பார்கள். மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வார்கள். அதனால் நண்பர்களுடன் இருக்கச் சொல்கிறார்.

**6. அதிகாரம் ஆபத்தானது.**

புகழ், அதிகாரம், அரசியலை வாழ்க்கையின் இலக்காக வைக்க வேண்டாம் என்று அறிவுறுத்தினார் எபிகுரஸ். ஏனென்றால் அதிகாரத்துக்கு ஆசைப்பட்டால் போட்டி, பொறாமை, பயம், எதிரிகள், மன அழுத்தம் உருவாகும். இது மன அமைதியை அழித்துவிடும். அதிகார லட்சியத் தில் வெற்றி அடைந்தாலும், அது தோல்விதான்.

**7. இன்பத்தை அனுபவியுங்கள்.**

தேவைகள் குறைவாக இருக்கும்போது சிறிய விஷயங்கள்கூட பெரிய மகிழ்ச்சியாகத் தெரியும். ஒரு சாதாரண உணவு. நல்ல உரையாடல். அமைதியான தூக்கம். நோயில்லாத உடல். பயமில்லாத மனமே பெரிய செல்வங்கள். ஒரு விருந்துக்குப் பிறகு இன்னொரு விருந்து, ஒரு பொருள் வாங்கியதும் அடுத்து ஒரு பொருள், ஒரு பதவிக்குப் பிறகு வேறு ஒரு பதவி என்று புதிய சுகங்களைத் தேடுவது இன்பம் அல்ல.

**8. எல்லாமே மாறிவிடும்**

நல்லவை எளிதில் கிடைக்கக்கூடியது. அதேநேரம், தாங்க முடியாத துன்பம் நீண்ட காலம் நீடிப்பதில்லை என்கிறார் எபிகுரஸ். அதாவது எவ்வளவு எளிமையாக வாழத் தயாராக இருக்கிறோம் என்பதில் மகிழ்ச்சி இருக்கிறது. வாழ்க்கையை பெரிதாக்குவதால் மகிழ்ச்சி வராது; தேவையற்ற ஆசைகளைச் சிறிதாக்குவதால் மனம் பெரிதாகிறது என்கிறார்.

அதேபோன்று சுமார் 2,300 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த எபிகுரஸ் கேட்ட நான்கு கேள்விகளுக்கு இன்று வரையிலும் பதில் இல்லை.

**இதோ அந்த நான்கு கேள்விகள்.**

- கடவுளுக்கு தீமையைத் தடுக்கும் திறனும் விருப்பமும் உள்ளதா? அப்படி இருந்தால் அவர் ஏன் தீமைகளைத் தடுக்காமல் இருக்கிறார்?
- கடவுள் தீமையைத் தடுக்க விரும்புகிறார், ஆனால் அவரால் முடியவில்லை என்பது உங்கள் பதில் கருத்தா? அப்படியானால் கடவுள் சர்வ வல்லமையுள்ளவர் அல்ல.
- கடவுளால் தீமையைத் தடுக்க முடியும், ஆனால் அவர் அதைச் செய்வதில்லை என்பது உங்கள் பதில் கருத்தா? அப்படியானால் கடவுள் தீயவர்.
- கடவுள் தீமையைத் தடுக்கும் திறனும் விருப்பமும் இல்லாதவர் என்பது உங்கள் பதில் கருத்தா? அப்படியானால் அவரை நீங்கள் ஏன் கடவுள் என்று அழைக்க வேண்டும்?

நியாயமான கேள்விகள். கடவுள், மரணம் பற்றிய அச்சமில்லாத வாழ்க்கையே மகிழ்ச்சியின் திறவுகோல்.










# காதல் என்பது உயிர் குடிக்கும் மிருகம்

சீரிஸ் எனும் வாழ்க்கை

காதலிப்பதும், காதலிக்கப்படுவதும் மிகப்பெரும் போதை. அதோடு மிகப்பெரும் அவஸ்தை. லட்சியம் இல்லாத இரண்டு பேர் எளிதாக காதலிக்கலாம், ஜெயிக்கலாம். ஒருவர் லட்சியத்துடன் இருக்கும் போது, மற்றவருக்கு லட்சிய மில்லை என்றாலும், அந்த காதல் ஜெயித்துவிடும். ஆனால், இரண்டு பேருக்கும் லட்சியம் இருந்து, காதலும் இருந்தால்... அது உயிரைக் குடிக்கும் நோயாக மாறிவிடும் என்பதே நெட்ஃபி ளிக்ஸில் வெளியாகியிருக்கும் முஸாஃபர் கஃபே கதைச் சுருக்கம்.

**முஸாஃபர் கஃபே**
**musafir cafe.**



www.gyaanaguru.com
www.gyaanaguru.com



இந்த குழப்பங்களுக்கு இடையில் சுதாவின் புதிய காதலன் அங்கு வருகிறான். இனி, என்ன ஆகும் என்பது அடுத்த சீசனில் தெரியவரும். முப்பது நிமிடங்களே கொண்ட குட்டிக் குட்டி எபிஸோடு என்பதால் விரைந்து பார்த்துவிடலாம். ரத்தம், வெட்டுக்குத்து இல்லாமல் ஒரு நல்ல காதல் கதையை பார்க்க விரும்புபவர்களுக்கு பெஸ்ட் சாய்ஸ்.

# காதல் என்பது உயிர் குடிக்கும் மிருகம்



காலம் காலமாக பார்த்துப் பழகிப்போன முக்கோணக் காதல் கதை. ஆனால், அதை திகட்டத் திகட்ட காதலுடன் வழங்கியிருக்கும் விதம் முஸாஃபர் கஃபேவுக்கு சுவையூட்டுகிறது.

விக்ராந்த் மாஸி இந்த தொடரில் சந்தர் மோகன் சர்மாவாக வாழ்ந்திருக்கிறார். ஒரு திட்டமிட்ட லட்சியத்துடன் வாழ்க்கையை தெளிவாக நகர்த்தும் டிசிப்ளின் இளைஞன். காதலும், கல்யாணமும் முக்கியம் என்று நினைக்கிறான். அவன் வாழ்க்கையில் ஒரு புயலாக நுழைகிறாள் சுதா. விவாகரத்து வழக்குகளை கையாளும் சுதாவின் அட்டகாச என்ட்ரியும் அவளது வசனங்களும் அடடே ரகம்.

தம்பதியர்களை பிரிப்பதுதான் வேலையா என்று சந்தர் கேட்டதும், ‘என்னிடம் வரும்போதே அவர்கள் பிரிந்திருப்பார்கள். அதற்கு கோர்ட்டில் சர்டிஃபிகேட் வாங்கித்தருவதுதான் என் வேலை’ என்று விளக்கம் கொடுக்கும்போதே, அவளது புத்திசாலித்தனம் தெரிந்துவிடுகிறது. காதல் முக்கியம் அதை விட லட்சியம் முக்கியம், அதையடுத்தே கல்யாணம் என்று நினைப்பவள். நான்லீனியராக சொல்லப்படும் கதையில் சந்தருடன் ரிலேசன்ஷிப்பில் இருக்கிறாள் ப்ரீத்தி. உலகத்தையே சுற்றிவருவதும் அதை பதிவு செய்வதும் ப்ரீத்தியின் லட்சியமாக இருந்தாலும், அதையெல்லாம் சந்தரின் காதலுக்காக தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்கிறாள். இந்த மூன்று பேரின் லட்சியத்துக்கும் காதலுக்கும் இடையில் மாட்டிக்கொண்டு அவஸ்தைப்படுகிறது முஸாஃபர் கஃபே. யாரும் யாரையும் ஏமாற்றவில்லை, அதேநேரம் மூன்று பேரும் மகிழ்ச்சியாகவும் இல்லை.

திவ்யா பிரகாஷ் டுபே எழுதிய முஸாஃபர் கஃபே நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டிருக்கும் இந்த தொடரின் முதல் எட்டு பாகம் மட்டும் இப்போது ரிலீஸ் ஆகியுள்ளது. இதில் கதை என்று சொல்வதற்கு எதுவுமில்லை. ஆனால், ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொரு வசனமும் புதிது. மூன்று பேரும் காதலின் எல்லையைத் தொடுகிறார்கள் என்பதற்கு இந்த வசனங்களே சாட்சி.

- உண்மையான காதல் என்றாலே அது நமக்கு சரியான காதலாக இருக்க வேண்டும் என்று யார் சொன்னது?
- சில காதல்கள் உண்மையானவைதான். ஆனால் எல்லா உண்மையான காதல்களும் வாழ்க்கைக்கு ஏற்றவையாக இருப்பதில்லை.
- சிலர் நம்முடன் வாழ்வதற்காக வருவதில்லை; நாம் யார் என்பதை நமக்கே உணர்த்திவிட்டு செல்வதற்காக வருகிறார்கள்.
- காதல் தோல்வியடைந்துவிட்டது என்பதற்காக அது பொய்யாகிவிடாது.”
- வாழ்க்கையின் வெவ்வேறு காலங்களில், இரண்டு வெவ்வேறு மனிதர்களைக் காதலிக்கக் கூடாது என்று எங்கே எழுதப்பட்டுள்ளது?
- சரியான நேரத்தில் கிடைக்கும் காதலை விட, தவறான நேரத்தில் கிடைக்கும் சரியான மனிதர் வாழ்க்கையை அதிகமாக மாற்றிவிடுகிறார்.
- ஒருவரை மறந்துவிட்டு இன்னொரு வரை காதலிப்பதல்ல வாழ்க்கை; சில நினைவுகளுடன் புதிய காதலை ஏற்றுக்கொள்வதுதான் வாழ்க்கை.
- சில காதல்கள் திருமணத்தில் முடிவதில்லை; ஆனால் ஒரு மனிதனின் வாழ்க்கையை முழுவதுமாக மாற்றிவிட்டு முடிகின்றன.
- காதல் என்பது யார் நம்முடன் இருக்கிறார்கள் என்பதல்ல; யார் நம்மை நாமாக மாற்றினார்கள் என்பதும்தான்.

## மந்திரச்சொல்

சொத்து நிரந்தரமான நண்பன் இல்லை. ஆனால், நண்பர்கள் நிரந்தரச் சொத்து.

முஸாஃபர் கஃபே என்பது சந்தரின் கனவு என்றாலும், அதை நனவாக்குவதற்கு காரணமாக இருந்தவள் சுதா. அதேநேரம், முஸாஃபர் கபே சிறப்பாக நடப்பதற்குக் காரணமாக இருக்கிறாள் ப்ரீத்தி. கதை நிகழ் காலத்திற்கும் கடந்த காலத்திற்கும் பயணிப்பதால், முதல் பகுதியிலே சந்தரும் சுதாவும் பிரிந்துவிட்டார்கள் என்று தெளிவாகத் தெரிகிறது. ஆனாலும் அவர்கள் எப்படி காதலித்தார்கள், முதல் சந்திப்பு, முதல் முத்தம், முதல் உறவு என்று எல்லாமே அட்டகாச ரசனை.

சுதாவின் கனவை நிறைவேற்றுவதற்காக தன்னுடைய லட்சியத்தை விட்டு அவளுடன் வாழ்வதற்கு சந்தர் தயாராக இருக்கிறான். ஆனால், காதலை விட லட்சியமே பெரிது என்று சந்தரை விரட்டுகிறாள் சுதா.

‘நீ எனக்காக உனது கனவுகளை விட்டுட்டு வராதே. எனக்காக உன்னை மாற்றிக் கொள்ளாதே. அதற்குப் பின்னால் மறைந்து இருக்கும் பொறுப்புகளை என்னால் எடுத்துக்கொள்ள முடியாது...’ என்று உறுதியாகச் சொல்கிறாள். சந்தரின் மனதில் சுதாவின் இடத்தை தன்னால் பிடித்துவிட முடியாது என்பது ப்ரீத்திக்கு நன்றாகத் தெரிகிறது. அவர்கள் பிரிந்து எட்டு வருடங்கள் ஆயிற்று ஆனாலும் என்றேனும் ஒருநாள் சுதா திரும்பி வந்துவிடுவாள் என்ற அச்சத்திலேதான் இருக்கிறாள். அவள் நினைத்தபடியே திரும்ப வருகிறாள் சுதா. சந்தரின் பழைய காதலியும் புதிய காதலியும் சந்தித்துப் பேசுகிறார்கள்.

“நான் இந்த நாட்டை விட்டு சிங்கப்பூருக்குப் போகிறேன். இதை அவனிடம் சொல்லிவிட்டுப் போகவேண்டும் என்று தோன்றியது அதனால்தான் வந்தேன். நீ ஏதும் கவலைப்படாதே. நான் வேறு எதற்காகவும் இங்கு வரவில்லை. அவன் வாழ்வில் நான் ஒரு சின்ன அத்தியாயம்தான். ஆனால் நீதான் அவனுக்கு முழு வாழ்க்கையும்...” என்று வெறுமையாக சிரிக்கிறாள் சுதா.

அதற்கு ப்ரீத்தி, "ஆமாம் நீ சின்ன அத்தியாயம்தான் ஆனால் மிக மிக முக்கியமான அத்தியாயம். நீ இல்லையென்றால் இந்த முஸாஃபர் கஃபே இல்லை, அவன் இல்லை. அவனுக்கு உன்னைத்தான் அதிகம் பிடிக்கும்” என்று உண்மையை ஒப்புக்கொள்ளும் போது ப்ரீத்தி பலவீனமாகி விடுகிறாள். ஒருவரையொருவர் காயப்படுத்தக் கூடாது என்று மிகவும் கவனமாகப் பேசுகிறார்கள். ஆனாலும், இருவரும் காயப்படுகிறார்கள்.

இந்த குழப்பங்களுக்கு இடையில் சுதாவின் புதிய காதலன் அங்கு வருகிறான். இனி, என்ன ஆகும் என்பது அடுத்த சீசனில் தெரியவரும். முப்பது நிமிடங்களே கொண்ட குட்டிக் குட்டி எபிஸோடு என்பதால் விரைந்து பார்த்துவிடலாம். ரத்தம், வெட்டுக்குத்து இல்லாமல் ஒரு நல்ல காதல் கதையை பார்க்க விரும்புபவர்களுக்கு பெஸ்ட் சாய்ஸ்.




# நான் அகங்காரம் பிடித்த சுயமரியாதைக்காரன்

## தூக்குக் கயிற்றை முத்தமிட்ட பகத் சிங் வாக்குமூலம்

இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகி பகத் சிங்கிற்கு இரண்டு முகம் உண்டு. ஒன்று, அவர் ஒரு சுதந்திரப் போராளி. இரண்டாவது அவர் பகுத்தறிவுவாதி. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அவரது தீவிரத்தை முதலில் பார்க்கலாம்.

ஒரு சிலருடைய பெயரைச் சொன்னாலே உணர்வுபூர்வமான பிணைப்பு வரும். பகத் சிங் என்று சொன்னாலே ஒரு கோபக்கார இளைஞன் முகம் ஞாபகத்துக்கு வரும். ஒரு தேசத்தின் கண்ணீர், அடிமைத்தனத்திற்கு எதிராக எழுந்த நெருப்பை உணரவைக்கும் ஒரு பெயர்தான் பகத் சிங்.

### சுதந்திர நெருப்பு

அவர் 23 ஆண்டுகள் மட்டுமே இந்த பூமியில் வாழ்ந்தார். ஆனால், பலர் நூறு ஆண்டுகள் வாழ்ந்தும் செய்ய முடியாத அளவுக்கு ஒரு தேசத்தின் மனசாட்சியைத் தட்டியெழுப்பிவிட்டு சென்றார்.

ஆங்கிலேயரின் காலடியில் இந்திய நாடு நசுங்கிக் கொண்டிருந்த இருண்ட காலத்தில் பகத்சிங் பிறந்தார். விவசாயிகளின் நிலங்கள் பறிக்கப்பட்டன. போராடியவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். சுதந்திரம் கேட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1919ம் ஆண்டு நடந்த ஜாலியன்வாலாபாக் படுகொலை, இளம் பகத் சிங்கின் மனதில் அழியாத காயத்தை ஏற்படுத்தியது. அப்போது அவர் ஒரு சிறுவன். ஆனால், அந்த ரத்தம் தோய்ந்த மண் அவரது மனதில் ஒரு கேள்வியை எழுப்பியது.

“என் நாடு எப்போது சுதந்திரமாகும்?” என்ற கேள்வியே அவரை புரட்சியாளனாக மாற்றியது. அவர் நிறையப் படித்தார். உலக அரசியல், புரட்சி, சமூகம், பொருளாதாரம், சமத்துவம் என்று ஆழமாக சிந்தித்தார். அவருக்கு சுதந்திர இந்தியா மட்டும் கனவு அல்ல. பசி இல்லாத இந்தியா, சாதி வேறுபாடு இல்லாத இந்தியா, மனிதன் மனிதனைச் சுரண்டாத இந்தியா வேண்டும் என்பதுதான் அவரது பெரிய கனவு.

“செவிடர்களைக் கேட்க வைப்பதற்கு ஒரு பெரிய சத்தம் தேவை” என்பதற்காக ஒரு புரட்சி செய்தார். 1929 ஏப்ரல் 8 அன்று, டெல்லியில் இருந்த மத்திய சட்டமன்றத்தில் பகத் சிங்கும் அவரது தோழர் படுகேஷ்வர் தத்தும் குண்டுகளை வீசினர்.

இதன் நோக்கம் மக்களைக் கொல்வது அல்ல. ஆங்கிலேய அரசின் அடக்குமுறை சட்டங்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினார்கள். குண்டுகள் வீசிய பிறகு அவர்கள் தப்பி ஓடவில்லை. துண்டுப் பிரசுரங்களை வீசியதுடன், “இன்குலாப் ஜிந்தாபாத்!” என்று முழக்கமிட்டு, தாங்களாகவே கைதானார்கள்.

கைதான பகத் சிங் மீது லாகூர் சதி வழக்கு போடப்பட்டது. 1928-ல் சைமன் கமிஷனுக்கு எதிராக போராடிய லாலா லஜபத் ராய் மீது காவல்துறையினர் கொடூரமாக தடியடி நடத்தினர். அதில் ஏற்பட்ட காயங்களால் அவர் பின்னர் உயிரிழந்தார். இதற்கு காரணமான காவல் அதிகாரி ஜேம்ஸ் ஸ்காட்டை பழிவாங்க திட்டமிடப்பட்டது. ஆனால் அடையாளத் தவறால் பிரிட்டிஷ் காவல் அதிகாரியான ஜான் சாண்டர்ஸ் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த வழக்கில் பகத் சிங், ராஜ்குரு, சுக்தேவ் உள்ளிட்டோர் குற்றம் சாட்டப்பட்டனர். இறுதியில் இதுவே பகத் சிங், ராஜ்குரு, சுக்தேவ் ஆகிய மூவருக்கும் தூக்கு தண்டனை விதிப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

### சிறைக்குள் ஒரு நெருப்பு

ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்ட பகத் சிங் சிறையில் அடைக்கப்பட்டார். அந்த சிறை அவரை உடைக்கவில்லை. சிறைக்குள் அவர் இன்னும் வலிமையானார். இந்திய கைதிகளுக்கும் ஆங்கிலேய கைதிகளுக்கும் வழங்கப்பட்ட உணவு மற்றும் வசதிகளில் இருந்த பாகுபாட்டை எதிர்த்து அவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

உடல் மெலிந்தது. உடல்நலம் பாதிக்கப்பட்டது. ஆனால் அவரது மனம் மட்டும் தலைகுனியவில்லை. சிறை அதிகாரிகள் அவரது உடலை அடக்க முயன்றார்கள். எதுவும் நடக்கவில்லை. அந்த போராட்டம் நடந்தபோதே பகத் சிங், ராஜ்குரு, சுக்தேவ் ஆகிய மூவருக்கும் தூக்கு தண்டனை என்று தீர்ப்பு வந்தது. பொதுவாக ஒரு சாதாரண 23 வயது இளைஞன் என்றால் உயிரைக் காப்பாற்றக் கெஞ்சுவார். மன்னிப்பு கேட்பார். ஆனால் பகத் சிங்? அவர் மரணத்தைப் பார்த்து பயப்படவில்லை. ஏனென்றால், அவர் உயிரைவிட உயர்ந்த ஒன்றாக சுதந்திரத்தை விரும்பினார்.

1931 மார்ச் 23 அன்று, லாகூர் சிறையில் மூவரும் தூக்கிலிடப்பட்டனர். இந்தியாவே அழுதது. ஆனால், தூக்குமேடைக்குச் செல்லும் அந்தக் கடைசி நிமிடங்களிலும் அவர்கள் பயத்தில் நடுங்கவில்லை என்று வரலாறு கூறுகிறது. அவர்கள் மரணத்தை நோக்கிச் செல்லவில்லை. அவர்கள் வரலாற்றுக்குள் நடந்து சென்றார்கள்.



## பகத் சிங் மறுபக்கம்

சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங் எழுதிய, 'நான் ஏன் நாத்திகனானேன்' என்ற நூல் இன்றும் ஒரு முக்கியமான ஒரு கட்டுரைத் தொகுப்பாக விளங்குகிறது. அவர் நாத்திகனாக மாறியதற்கான பின்னணி, அதற்கு தர்க்கரீதியான காரணங்களை தெளிவாக விளக்கியிருக்கிறார். பகத் சிங்கின் சிந்தனைப் போக்கு எவ்வாறு மாறியது என்பதை சுருக்கமாக இங்கு பார்க்கலாம்.

### 1. குடும்ப பின்னணி

சிறுவயதில் பகத் சிங் கடவுள் நம்பிக்கை கொண்டவராகவே இருந்திருக்கிறார். அவரது தாத்தா, தந்தை மற்றும் தாய் என குடும்பத்தினர் அனைவருமே தீவிரக் கடவுள் நம்பிக்கை உடையவர்கள். ஆனால், அவர் வளர வளர வாசிப்பின் மூலம், சிந்தனையின் மூலம் கடவுள் நம்பிக்கை அவரை விட்டு மெல்ல மெல்ல விலகத் தொடங்கியது.

### 2. வாசிப்பின் அவசியம்

நாத்திகனாக மாறியதற்கு மிக முக்கியமான காரணமாக பகத் சிங் குறிப்பிடுவது கற்றுணர்தல் என்ற கருத்தைத்தான். சும்மா வாசிக்காமல், அதை ஆழமாகக் கற்று உணர வேண்டும் என்பதற்கு பகத் சிங் கூறும் விளக்கம் மிக ஆழமானது:

எதிராளிகளின் பலமான ஆட்சேபனைகளுக்கு அச்சமின்றி ஆணித்தரமான பதில், விளக்கம் கொடுப்பதற்கு கற்றுணர்ந்தார். லட்சியம், கொள்கை ஆகியவற்றின் போக்கைப் பரிசீலனை வாதங்களால் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு கற்றுணர்ந்ததாகக் குறிப்பிடுகிறார்.

### 3. வழிகாட்டிகள்

மனிதர்கள் அனைவரும் எந்த நூல்களை அவசியம் படிக்க வேண்டும் என்பதற்குச் சில முக்கிய வழிகாட்டல்களை பகத் சிங் முன்வைக்கிறார்.

- பொதுவுடைமையைப் புரிந்து கொள்வதற்கு கார்ல் மார்க்ஸ் நூல்கள்.
- புரட்சியைப் புரிந்து கொள்ள ரஷ்யப் புரட்சி உருவாக்கிய லெனின் பற்றிய நூல்கள்.
- மனிதப் பரிணாமத்தைப் தர்க்கரீதியாக அறிய சார்லஸ் டார்வினின் 'ஆரிஜின் ஆஃப் ஸ்பீசிஸ்' (Origin of Species) நூல்.

### 4. கடவுள் நம்பிக்கை

கடவுள் நம்பிக்கையும், தத்துவ சாஸ்திரங்களும் மனிதனின் பலவீனமே தவிர, வலிமை அல்ல என்கிறார் பகத் சிங். மனிதன் தனது வாழ்க்கையில் துன்பப்படும் நேரத்தில், நண்பர்கள் மற்றும் உறவினர்களால் வஞ்சிக்கப்பட்டுத் தனிமையாகும் நேரத்தில், தனக்கு ஆதரவாக யாராவது ஒருவர் இருக்க மாட்டார்களா என்று ஏங்குகிறான். அந்த ஏக்கத்தில் உருவான ஒரு கற்பனை அமைப்பே கடவுள். இந்த எதார்த்தத்தை எதிர்கொள்ள முடியாமல், மனிதன் ஒரு கற்பனை உலகிலேயே வாழ்வது அவனது பலவீனத்தையே காட்டுகிறது.

அதேபோல், தினமும் இறைவனிடம் தன் தேவைகளுக்காகப் பிரார்த்தனை செய்வதும், தொழுகையில் ஈடுபடுவதும் மனிதனின் சுயநலத்தையே வெளிப்படுத்துகிறது.

### 5. புரட்சியின் அடையாளம்:

ஒரு மனிதனுக்குப் பகுத்தறியும் ஆராய்ச்சித்திறனும், சுயேச்சையாகச் சிந்திக்கும் ஆற்றலும் வந்துவிட்டால், அவன் நிச்சயம் ஒரு புரட்சியாளனாகவே மாறுவான் என்கிறார்.

இறுதியாக முடிவுரையில் பகத் சிங் கூறுவது இதுதான்.

"எனக்கு இந்தச் சுயநலமும் பலவீனமும் தேவையில்லை. தூக்குமேடையைக் கூட நான் ஒரு சுயமரியாதையுள்ள ஆன்ம பலம் கொண்ட மனிதனாகவே எதிர்கொள்வேன். இதை நீங்கள் 'அகங்காரம்' என்று சொன்னால், ஆம்... நான் அந்த அகங்காரம் உள்ளவன்தான்".







# யார் இந்த … மர்..?

# போதி தர்மர்..?



ஆன்மிகம், மருத்துவம், தற்காப்புக்கலை ஆகிய மூன்றிலும் தவிர்க்கமுடியாத ஒரு நபராக இருக்கிறார் போதி தர்மர். யார் இவர்..?

இந்தியாவில் பிறந்து, பின்னர் சீனாவுக்குச் சென்று புத்த மதத்தின் ஒரு புதிய சிந்தனைப் பாதையைப் பரப்பிய துறவி என்று வரலாற்றில் அறியப்படுகிறார் போதிதர்மர். இவர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர் என்றும் குறிப்பாக அவர் பல்லவ அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

இந்தியாவில் இருந்த புத்தரின் தியான முறைகளை சீனாவுக்குக் கொண்டு சென்ற போதிதர்மர் வலியுறுத்திய முக்கிய கருத்து, 'வெளியில் கடவுளைத் தேடாதே, உன் மனதிற்குள் உண்மையைத் தேடு' என்பதுதான்.

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

அதாவது, மதச்சடங்குகள், புத்தகங்களைப் படிப்பது மட்டும் போதாது. உண்மையான ஞானம் மனதை அறிந்துகொள்வதில் இருக்கிறது. தியானத்தின் மூலம் மனிதன் தன்னைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற சிந்தனையே பின்னர் சீனாவில் சான் (Chan) புத்த மதம் என்றும், ஜப்பானில் ஜென் (Zen) புத்த மதம் என்றும் வளர்ந்தது.

போதி தர்மர் சீனாவின் ஷாவோலின் கோவிலுக்குச் சென்றதாகவும், அங்கிருந்த துறவிகளுக்கு உடல் மற்றும் மனப் பயிற்சிகளை கற்றுக் கொடுத்ததாகவும் பிரபலமான கதைகள் உள்ளன. மருத்துவக் கலையிலும் முன்னோடியாக கூறுகிறார்கள்.

மனிதனின் உண்மையான எதிரி வெளியே இல்லை, அவரது மனதில்தான் இருக்கிறது. அது, கோபம், பேராசை, பயம், அகங்காரம், அறியாமையை வெல்வதுதான் உண்மையான வெற்றி என்கிறார் போதி தர்மர்.

### போதிதர்மரின் முதல் சீடர்

சீடர்களை போதிதர்மர் எப்படி தேர்வு செய்தார், எப்படி மறைந்தார் என்பதை, 'போதிதர்மர்' நூலில் ஓஷோ எழுதியிருக்கிறார். அதிலிருந்து குறப்பிட்ட பகுதிகள் இங்கே.

இரண்டு லட்சம் புத்த மத பிட்சுக்கள் சீனாவிலிருந்தாலும் கூட, போதிதர்மர் தனது சீடர்களாகஏற்றுக்கொள்ளதகுதியுடையவர்களாக நான்கு பேரை மட்டுமே கண்டு பிடிக்க முடிந்தது. அவர் உண்மையாகவே மிகவும் குறிப்பாக தேர்ந்தெடுத்தார். அவரது முதல் சீடரான ஹூய்கோவை கண்டுபிடிக்க அவருக்கு கிட்டதட்ட ஒன்பது ஆண்டுகள் பிடித்தது. இது ஒரு சரித்திர உண்மை. ஏனெனில் மிகவும் பழமையான குறிப்புகள் உள்ளன. கிட்டதட்ட போதிதர்மருடைய காலத்திய குறிப்புகள் எல்லாவற்றிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றவை குறிப்பிடப்படா விட்டாலும் 'வூ' வை அரண்மனைக்கு திருப்பி அனுப்பிய பிறகு அவர் கோவில் சுவற்றைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார் என்பது குறிப்பிடப்படுள்ளது. அவர் அதனை ஒரு சிறந்த தியானமாக ஆக்கிக் கொண்டார். அவர் வெறுமனே எளிமையாக சுவற்றை பார்த்துக் கொண்டே இருப்பார். அதிக நேரம் நீ சுவற்றை பார்த்துக் கொண்டேயிருந்தால் உன்னால் யோசிக்க முடியாது. மெதுமெதுவாக அந்த சுவற்றைப் போலவே உனது மனதின் திரையும் காலியாகி விடுகிறது.

மேலும் அதற்கு இரண்டாவது காரணமும் இருந்தது. என்னுடைய சீடனாக இருக்கும்



## மந்திரச்சொல்

எதற்காகவும் வருந்தாதீர்கள். நடந்த நல்லவை எல்லாம் மகிழ்ச்சி. தீயவை எல்லாம் படிப்பினை.





ஒரு சுவர் எப்படியிருந்தாலும் அது சுவரே. அது கேட்க முடியாது. எனவே, என்னைத் தேடி வருபவர் யாரும் காயப்பட தேவையில்லை. "யாராவதொருவர் அவருடைய செயலின் மூலம் அவர் எனது சீடராக தயாராக இருக்கிறார் என்று நிருபித்தால் மட்டுமே நான் வருபவர்களைப் பார்த்து திரும்புவேன்" என்று கூறி இருந்தார்.

# யார் இந்த போதி தர்மர்?

தகுதியுடைய யாராவது ஒருவர் வரும்வரை நான் யாரையும் பார்க்க மாட்டேன் என அவர் அறிவித்தார்.

மக்கள் வருவார்கள், அவருக்கு பின் அமர்வார்கள். அது ஒரு வித்தியாசமான சூழ்நிலை. இந்த முறையில் யாரும் அவரிடம் பேசியதில்லை. அவர் சுவற்றிடம் பேசுவார். மக்கள் அவருக்கு பின் அமர்ந்திருப்பார்கள். ஆனால் அவர் வருபவர்களை பார்க்க மாட்டார்.

### விசித்திர சீடன்

ஒரு சுவர் எப்படியிருந்தாலும் அது சுவரே. அது கேட்க முடியாது. எனவே, என்னைத் தேடி வருபவர் யாரும் காயப்பட தேவையில்லை. "யாராவதொருவர் அவருடைய செயலின் மூலம் அவர் எனது சீடராக தயாராக இருக்கிறார் என்று நிருபித்தால் மட்டுமே நான் வருபவர்களைப் பார்த்து திரும்புவேன்" என்று கூறி இருந்தார். ஒன்பது வருடங்கள் கடந்து விட்டன. மக்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எந்த செயல் அவருக்கு திருப்தியளிக்கும் என்று அவர்களால் கண்டறிய முடியவில்லை. பிறகு அந்த இளைஞன் 'ஹூய்கோ' வந்தான்.

அவன் அவனுடைய கைகளில் ஒன்றை வாளால் வெட்டி அந்தக் கையை போதிதர்மர் முன் வீசிவிட்டு, "இது ஆரம்பம்தான். நீங்கள் திரும்புங்கள் அல்லது என் தலை உங்கள் முன் உருளும். நான் எனது தலையையும் வெட்டப் போகிறேன்" என்றான்.

போதிதர்மர் திரும்பி, ''நீ எனக்கு சீடனாக தகுதியுடைய மனிதன். தலையை வெட்ட வேண்டிய தில்லை. நாம் அதனை உபயோகப்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

இந்த மனிதன் ஹூய்கோதான் அவரது முதல் சீடர். முடிவில் போதிதர்மர் சீனாவை விட்டு செல்லும்போது அவர் ஹூய்கோவிற்குப் பிறகு மேலும் மூன்று சீடர்களை சேர்த்திருந்தார். அவர் சீனாவை விட்டு செல்ல முடிவெடுத்த பிறகு தனது நான்கு சீடர்களையும் அழைத்து, "எளிமையான வார்த்தைகளில், சிறிய வாக்கியங்களில், தந்தி முறையில் என்னுடைய போதனைகளின் மூலத்தைக் கூறுங்கள். நாளை காலையில் நான் இமயமலைக்கு திரும்பிச் செல்ல முடிவெடுத்துள்ளேன். அதனால் உங்கள் நால்வரில் ஒருவரை வாரிசாக தேர்ந்தெடுக்க விரும்புகிறேன்" என்றார்.

### கடைசி வாரிசு

முதலாமவன், ''மனதை தாண்டிச் செல்வது, முற்றிலும் மௌனமாக இருப்பது, அதன்பிறகு அனைத்தும் தானாகவே நடக்கிறது" எனக் கூறினான்.

போதிதர்மர், ''நீ கூறியது தவறல்ல, ஆனால் நீ என்னை திருப்திபடுத்தவில்லை. உன்னிடம் எனது தோல் உள்ளது" என்றார்...

இரண்டாமவன், "நான் இல்லை, பிரபஞ்சம் மட்டுமே உள்ளது, என்பதை அறிந்து கொள்வதே உங்களது அடிப்படையான போதனை" என்றான். போதிதர்மர், "சிறிது பரவாயில்லை, ஆனால் அது எனது தகுதியளவிற்கு இல்லை. உன்னிடம் எனது எலும்புகள் உள்ளன" என்றார்...

மூன்றாவது மனிதன், "அதைப்பற்றி ஏதும் சொல்ல முடியாது. எந்த வார்த்தையும் அதை கூறும் சக்தியற்றது" என்றான்.

அதற்கு போதிதர்மர், "நன்று, ஆனால் நீ ஏற்கனவே அதைப் பற்றி ஏதோ ஒன்றைக் கூறிவிட்டாய். உனக்கு நீயே முரண்பட்டு விட்டாய். வெறுமனே உட்கார். உன்னிடம் எனது சதை உள்ளது" என்றார்...

நான்காவதாக அவரது முதல் சீடன் ஹூய்கோ அவரது காலில் விழுந்தான். அவனது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. போதிதர்மர்,

"நீ அதை சொல்லிவிட்டாய். நீதான் எனது வாரிசாகப் போகிறாய்" என்றார்.

### போதிதர்மருக்கு விஷம்

இரவில் ஏதோ ஒரு சீடன் அவன் வாரிசாகத் தேர்ந்தெடுக்கப் படவில்லை என்பதற்காக அவருக்கு விஷமளித்து விட்டான். எனவே அவர்கள் அவரை புதைத்தனர்.

ஆனால் வித்தியாசமான மூன்றாவது செவிவழி செய்தி என்னவென்றால் ஒரு அரசாங்க அதிகாரி மூன்று வருடங்களுக்குப் பிறகு சீனாவிற்கு வெளியே இமயமலையை நோக்கி போதிதர்மர் நடந்துபோய்க் கொண்டி ருப்பதை பார்த்தார். போதிதர்மருடைய கையில் அவருடைய தடியிருந்தது.

மேலும் அவருடைய செருப்பு அந்த தடியிலிருந்து தொங்கிக் கொண்டிருந்தது.

ஞானகுரு
# மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ் 5 - 10

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.

**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 98844 53014

**இ.மெயில் :** skmnila1@gmail.com

**இணையதளம் :** www.gyaanaguru.com



மேலும் அவர் வெறும் காலில் நடந்து கொண்டிருந்தார். அந்த அதிகாரிக்கு அவரைத் தெரியும். அந்த அதிகாரி அவரிடம் பலமுறை வந்திருக்கிறார். அவர் ஒருமாதிரி இருந்தாலும்கூட போதிதர்மர் மீது அந்த அதிகாரி அன்பு செலுத்தினார்.

அதிகாரி அவரிடம் "இந்த தடிக்கும் இதில் ஒரு செருப்பு தொங்குவதற்கும் என்ன அர்த்தம்?" என்று கேட்டார்.

போதிதர்மர் "விரைவில் நீ அறிந்து கொள்வாய். நீ எனது மக்களை சந்தித்தால் வெறுமனே அவர்களிடம் நான் ஒரேடியாக இமயமலைக்கு செல்கிறேன் என்று கூறிவிடு" என்று கூறினார்.

### இமயமலையில் போதிதர்மர்

அதிகாரி, அவரால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக போதிதர்மர் வாழ்ந்து கொண்டிருந்த மலையில் இருக்கும் மடாலயத்திற்கு சென்றார். அங்கு அவர் போதிதர்மருக்கு விஷம் வைக்கப்பட்டதையும் அவர் இறந்து விட்டதையும் கேள்விப்பட்டார். அங்கு அவரது சமாதியிருந்தது. அதிகாரி பேரரசரின் எல்லைப்பகுதியில் நியமிக்கப்பட்ட காரணத்தால் இதைப்பற்றி கேள்விப்படவில்லை.

அவர், "கடவுளே, நான் அவரைப் பார்த்தேன். நான் ஏமாந்திருக்க முடியாது. ஏனெனில் நான் முன்பே அவரை பலமுறை பார்த்திருக்கிறேன். அவர் அதே மனிதன்தான். அதே கோபக்கண்கள், அதே தீப்போன்ற காட்டுத்தனமான உருவம், மேலும் உச்சக்கட்டமாக அவர் அவருடைய தடியில் அவருடைய ஒரு செருப்பை சுமந்திருந்தார்" என்று கூறினார்.

சீடர்களால் அவர்களது ஆர்வத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. அவரது சமாதியைத் திறந்தனர். அவர்கள் அங்கு கண்டதெல்லாம் ஒரே ஒரு செருப்பு மட்டுமே. "அந்த காரணத்தை விரைவில் நீ அறிந்து கொள்வாய்" என்று போதிதர்மர் ஏன் கூறி அனுப்பி வைத்தார் என்பது புரிந்தது..

அவர் அழிவற்ற இமயமலையின் பனிக்கட்டிகளில் இறக்க விரும்பினார். அவரைக் குறித்து எந்த சமாதியும், எந்த சிலையும் இருக்கக்கூடாது என விரும்பினார். அவர் அவருக்கு பின்பு தொழுவதற்கு எந்த காலடி தடத்தையும் விட்டு வைக்கவில்லை. அவரை நேசிப்பவர்கள் அவரது சொந்த இருப்பினுள் நுழைய வேண்டும். அவர் கிட்டதட்ட காற்றில் மறைந்துவிட்டார்.

என்ன நடந்தது, எங்கு அவர் இறந்தார் என்பது குறித்து யாரும் எதையும் கேள்விப்படவில்லை. அவர் கண்டிப்பாக இமயமலையின் அழிவற்ற பனிகளில் எங்கோ புதைந்திருக்கவேண்டும்.





## கவித்துவம்

எல்லோரும்
அப்படித்தான் வாழ்கிறார்கள்
என்பதற்காக,
எல்லோரும்
அப்படித்தான் வாழவேண்டும்
என்ற அவசியமில்லை.
- லதா




## ஞானகுரு மகிழ்ச்சியாளர் சேர்க்கை ஆரம்பம்

# ஆயுள் சந்தா 1 லட்சம் ரூபாய்

மகிழ்ச்சியைப் பரப்பும் ஒரு புதிய மதம் ஞானகுரு.

ஆரோக்கிய உடல், நிம்மதியான மனம், போதுமான பணம் ஆகியவற்றுடன் ஆறுதலான உறவுகள் அமைவதே மனிதருக்கு மகிழ்ச்சி தருகிறது. இவற்றை ஒவ்வொரு நபரும் அடைவதற்கு வழிகாட்டும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி, ஞானகுரு யாக்கை, ஞானகுரு தமிழ்லீடர் போன்ற மின்னிதழ்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஞானகுரு பதிப்பகத்திலிருந்து நம்பிக்கையூட்டும் நூல்கள் வெளியாவதுடன், அன்றாடம் புதிய செய்திகளுடன் ஞானகுரு இணையம் - ஞானகுரு (gyaanaguru.com) இயங்கி வருகிறது. இவை எல்லாமே நிறைய வாசகர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்த சேவையைத் தொடர்வதற்கும் மகிழ்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் ஞானகுரு மகிழ்ச்சியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஞானகுரு இயக்கத்தில் சேர்வதற்கு வாழ்நாள் சந்தா என ரூபாய் 1 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிறைய செல்வமும் பெரிய மனமும் உள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்திற்கு செலவு செய்தால் போதும் என்பதற்காகவே இந்த தொகை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மகிழ்ச்சியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது நம்முடைய வாசகர்கள், ஞானகுரு ஆதரவாளர்கள் மற்றும் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும். ஞானகுரு மகிழ்ச்சியாளராக இணைப வருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஞானகுரு மின்னிதழ்களின் அச்சு இதழ் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். ஞானகுரு பதிப்பக புத்தகங்களும் வெளியாகும் தருணங்களில் அனுப்பப்படும். அதோடு மனவளக் கலை பயிற்சியளித்து தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். ஞானகுரு குடும்பத்தில் இணைவதற்கு அன்போடு அழைக்கிறோம்.

**தொகை அனுப்ப வேண்டிய முகவரி:**
Gyanaguru Publication, Union Bank of India,
Current Account No. 548401010050639,
IFSC CODE : UBIN0554847, PAN : AKLPJ7628N

மேலும் தொடர்புக்கு : எஸ்.கே.முருகன் -
9840903586, 7299753999



# சோம்பேறி மூளைக்கு வெயிட் லிஃப்டிங் பயிற்சி

## எமோஷனல் ரீடிங்

வீடியோவில் ஒரு கதையை படமாகப் பார்ப்பதற்கும், அதே கதையைப் புத்தகமாக வாசிப்பதற்கும் இடையே மிகப்பெரும் வேறுபாடு உள்ளது. அது, மூளையின் உள்ளமைப்பை தலைகீழாக மாற்றக்கூடிய ஒரு மாபெரும் உயிரியல் செயல்பாடு.

நமது மூளை அடிப்படையில் ஒரு சோம்பேறி. சுலபமாகச் செய்ய முடியும் வேலைகளை மட்டுமே அது விரும்பும். ஒரு சினிமா அல்லது சமூக வலைத்தள வீடியோ பார்க்கும்போது முகங்கள், இடங்கள், பின்னணி இசை என அனைத்தும் ரெடிமேடாக மூளைக்கு ஊட்டப்படுகிறது. மூளை இங்கே எந்த மெனக்கெடலும் இல்லாமல் வேடிக்கை மட்டுமே பார்க்கிறது.

ஆனால், ஒரு நாவலை வாசிக்கும்போது அங்கே எழுத்துகள் மட்டுமே உள்ளன. அந்த எழுத்துகளை வைத்து, நாயகனின் முகத்தை, அவன் நடக்கும் வீதியை, வீசும் காற்றை, உணர்வுகளை மூளை சுயமாகக் கற்பனை செய்கிறது. அதாவது, மூளை தனக்குத் தானே ஒரு மாபெரும் திரைப்படத்தை இயக்குகிறது. இது மூளைக்கான மிகக் கடுமையான


www.gyaanaguru.com

வெயிட் லிஃப்டிங் உடற்பயிற்சி.

மனித மூளை பேசுவதற்கும் கேட்பதற்கும் இயற்கையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் வாசிப்பு இயற்கையானது அல்ல. அது மனிதன் செயற்கையாகக் கண்டுபிடித்த ஒரு திறன்.



எனவே, வாசிக்கத் தொடங்கும் ஒவ்வொரு முறையும் உங்கள் மூளை தன்னைத்தானே புதிய நரம்பியல் இணைப்புகளால் மறுகட்டமைப்பு செய்துகொள்கிறது. இதற்கு அறிவியலில் 'நியூரோபிளாஸ்டிசிட்டி' என்று பெயர். அதாவது, உங்கள் மூளை ஒரு ரப்பரைப் போல நெகிழ்ந்து கொடுத்து, புதிய திறன்களை உள்வாங்கி, தன்னைத்தானே மேம்படுத்திக் கொள்ளும் ஒரு மென்பொருள் அப்டேட் போன்றது.



அச்சுப் புத்தகங்களுக்கும், மொபைல் திரையில் வாசிப்பதற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு. சமூக வலைத்தளங்களில் நாம் வாசிப்பதில்லை; வெறும் 'ஸ்கேனிங்' மட்டுமே செய்கிறோம். 30 நொடிகளுக்கு ஒருமுறை திரையை உருட்டும்போது, மூளைக்குள் 'டோபமைன்' என்ற ரசாயனம் சுரந்து ஒரு தற்காலிக போதையைத் தருகிறது. இது நமது கவனச்சிதறலை மோசமாகப் பாதிக்கிறது.

ஒரு அச்சுப் புத்தகத்தை எடுத்து, காகித வாசனையுடன், ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் படிக்கும்போது, மூளை பல அமைப்புகளை ஒரே நேரத்தில் செயல்படுத்துகிறது. தொடு உணர்வு, பொறுமை, மற்றும் வாக்கியங்களின் உள்ளர்த்தத்தைப் புரிந்துகொள்ளும் 'நிர்வாகப் பகுத்தறிவு' ஆகியவை அச்சுப் புத்தக வாசிப்பில்தான் உச்சக்கட்டத்தை அடைகின்றன.

புனைவுப் புத்தகங்களை வாசிப்பவர்களுக்கு உணர்வுப்பூர்வமான நுண்ணறிவு எனப்படும் எமோஷனல் இன்டெலிஜென்ஸ் மிக அதிகமாக இருக்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஒரு நாவலில் வரும் கதாபாத்திரத்தின் வலியை, சந்தோஷத்தை, தவிப்பை வாசிக்கும்போது, நிஜ வாழ்விலேயே அந்த உணர்வுகளை நீங்கள் அனுபவிப்பதைப் போல உங்கள் மூளையின் நரம்புகள் தூண்டப்படுகின்றன.

மனிதர்களின் மனநிலையை, அவர்களின் இடத்திலிருந்து துல்லியமாகப் புரிந்துகொள்ளும் மாபெரும் பக்குவத்தை வாசிப்பு மட்டுமே மனிதனுக்குத் தருகிறது. ஒருவன் தன் நிஜ வாழ்வில் ஒரு வாழ்க்கையைத்தான் வாழ முடியும்; ஆனால் ஒரு வாசகன் தன் வாழ்நாளுக்குள் ஆயிரம் பேரின் வாழ்க்கையை வாழ்ந்து பார்த்துவிடுகிறான்.

தொடர்ந்து புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு, புதிய சொற்களஞ் சியங்கள் உருவாவதால் அவர்களின் பேசும் திறன் மற்றும் விமர்சனச் சிந்தனை பல மடங்கு கூர்மையடைகிறது. அதைவிட முக்கியமாக, வாசிப்பு மூளையில் புதிய செல்களைத் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டே இருப்பதால், வயதாகும்போது ஏற்படும் ஞாபக மறதி நோய்களான 'அல்சைமர்' மற்றும் 'டிமென்ஷியா' போன்றவை வாசகர்களை எளிதில் தாக்குவதில்லை.

ஜார்ஜ் ஆர்.ஆர். மார்ட்டின், "வாசிக்கும் மனிதன் இறப்பதற்கு முன் ஆயிரம் வாழ்க்கை வாழ்கிறான். வாசிக்காத மனிதன் ஒரே ஒரு வாழ்க்கையை மட்டுமே வாழ்கிறான்." என்கிறார்.

புத்தகத்தில் மூழ்குவது என்பது இந்த நிஜ உலகப் பிரச்சனைகளிலிருந்து தப்பித்து ஓடும் 'எஸ்கேபிஸம்' அல்ல; மாறாக, இந்த நிஜ உலகத்தை இன்னும் வலிமையாக, இன்னும் தெளிவாக, இன்னும் நுட்பமாக எதிர்கொள்வதற்கான மாபெரும் ஆயுதங்களை நமது மூளைக்குள் நாமே தயாரித்துக்கொள்ளும் ஒரு பிரம்மாண்டமான தொழிற்சாலை!

எனவே, நீங்கள் உடற்பயிற்சிக் கூடத்திற்குச் சென்று உங்கள் தசைகளை முறுக்கேற்றுவது போன்று தினமும் ஒரு அரை மணி நேரம் நல்லதொரு புத்தகத்தை வாசித்து உங்கள் மூளையின் நரம்புகளை முறுக்கேற்றுங்கள்!

**- அப்துல்லா இப்னு நசீர்**









# உங்களை இயக்குவது யார்..?

## வாக்கிங் தத்துவம்



**கா**லை எழுந்து வாக்கிங் செல்கிறீர்கள். உங்களுக்கு முன்னால் 200 மீட்டரில் ஒருவர் நடந்துகொண்டு இருக்கிறார். அவர் கிட்டத்தட்ட நீங்கள் செல்லும் வேகத்தில்தான் நடக்கிறார் என்பதுபோல் தெரிகிறது. எனவே, அதனால், அவரை சீக்கிரம் பிடித்து விடலாம் நினைக்கிறீர்கள்.

உடனடியாக கொஞ்சம் வேகத்தை அதிகரித்து அவரை நோக்கி நடக்கிறீர்கள். சிறிது சிறிதாக இருவருக்கும் இடையே உள்ள தூரம் குறைந்துகொண்டே வருகிறது.

சில நிமிடங்களில் இருவருக்கும் இடையில் உள்ள இடைவெளி 50 மீட்டராகக் குறைகிறது. இன்னும் கொஞ்சம் வேகத்தை கூட்டினால் அவரைப் பிடித்து விடலாம் என்ற எண்ணம் வருகிறது. அதனால் வேகத்தை மீண்டும் அதிகரிக்கிறீர்கள்.

ஒரு வழியாக அவர் அருகே வந்துவிட்டீர்கள். அதே வேகத்தில் அவரை தாண்டியும் விட்டீர்கள். இப்போது மனதுக்கு கொஞ்சம் நிம்மதி கிடைக்கிறது. இப்போது பக்கத்தில் வருபவர் முகத்தைப் பார்க்கிறீர்கள். அதில், எந்த மாற்றமும் இல்லை. அவர் நீங்கள் தாண்டிச் சென்றதை ஒரு பொருட்டாகவே மதிக்காமல், ஜாலியாக நடந்துகொண்டு இருக்கிறார்.

அப்போதுதான், அவருடன் போட்டியிட்டது ஏன் என்று யோசிக்கிறீர்கள். அவருடன் போட்டியிட்டதால் சில சிக்கல் நடந்திருப்பதும் புரிகிறது. அதாவது, அவரை முந்த வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக இருந்த காரணத்தால், வீட்டுக்குத் திரும்ப வேண்டிய வளைவைத் தாண்டி வந்திருக்கிறீர்கள்.

நடைப்பயிற்சியில் வழக்கமாகக் கிடைக்கும் மன அமைதி இல்லாமல் போட்டி மனப்பான்மையில் இருந்திருக்கிறீர்கள். எப்போதும் உங்களைப் பார்த்து சிரிக்கும் சில நபர்களைக் கண்டு கொள்ளாமல் தாண்டியிருக்கிறீர்கள். சுற்றி இருக்கும் இயற்கை அழகை ரசிக்கவில்லை.

ஒருவரை தாண்ட வேண்டும் என்று போட்டியிட்டதில் வெற்றி கிடைத்தது என்றாலும் இழந்தது அதிகம் என்பது புரிகிறது. அதேபோல், இப்படி போட்டியிடுவதால் எந்த பிரயோஜனமும் இல்லை என்பதும் தெரிகிறது. ஆனால், வாழ்க்கையில் இதைத் தான் நிறைய பேர் கடைப்பிடிக்கிறார்கள்.

நண்பர்கள், சேர்ந்து பணிபுரிபவர்கள், அருகில் வசிப்பவர்கள், குடும்ப உறவுகளுடன் போட்டியிட்டு, அவர்களை விட முன்னேற வேண்டும், அவர்களை விட வெற்றிகரமாக வாழ்ந்து காட்ட வேண்டும் என்று கண்ணைக் கட்டிய குதிரை போன்று ஓடுகிறார்கள். வாழ்வின் பெரும்பாலான நேரத்தையும், ஆற்றலையும் ஓடுவதிலேயே தொலைத்து, சேர வேண்டிய உண்மையான பாதையை தொலைக்கிறார்கள்.

எப்பொழுதும் உங்களுக்கு முன் யாராவது ஒருவர் போய்க்கொண்டுதான் இருப்பார். அவருக்கு நல்ல வேலை இருக்கலாம். நல்ல கார் இருக்கலாம். அவருக்கு வங்கியில் நிறைய பணம் இருக்கலாம். அழகான மனைவி இருக்கலாம்.

அவருக்கு எப்படி கிடைத்தது? எங்கே செல்கிறார்கள்,? என்ன அணிகிறார்கள்? என்ன வாகனம் ஓட்டுகிறார்கள்? என்ன பேசுகிறார்கள்? என்பதில் கவனம் செலுத்தினால் சொந்த வாழ்க்கையை வாழ முடியாது. யாருடன் போட்டி போடுகிறீர்களோ, அவரை போலவே மாறிவிடுவீர்கள்.

எனவே, ஒவ்வொரு நபரும் முக்கியமாக உணர வேண்டியது என்னவென்றால், யாருடனும் போட்டி போடாத நேரத்தில் மட்டுமே, ஒருவர் இயல்பான நபராக, தனித்தன்மை மிக்கவராக இருக்க முடியும்.

நீங்கள் யாருக்கும் போட்டி இல்லை. யாரும் உங்களுக்குப் போட்டி இல்லை. அவரவர் வாழ்க்கை அவரவர்க்கு மட்டுமே சொந்தம். ஒப்பீடு செய்வதும், போட்டி மனப்பான்மையும் மன மகிழ்ச்சியை திருடிவிடும். மற்றவரை காப்பியடிக்க விரும்புபவருக்கு நிம்மதி காணாமல் போய்விடும்.

எனவே, உங்களுடன் மட்டுமே போட்டியிடுங்கள். உங்கள் அறிவை பெருக்குங்கள். உங்கள் உறவை பெருக்குங்கள். உங்கள் மகிழ்ச்சியைப் பெருக்குங்கள்.

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

**? எல்லாமே மிகச்சரியாக இருக்க வேண்டும், எல்லோரும் மிகச்சரியாக செய்யவேண்டும் என்று நினைக்கிறேன். இது, சரிதானே..?**

**– என். வசந்தன், ஆதம்பாக்கம்.**

**ஞானகுரு :**

மிகச்சரியானவை, முழுமையானவை என்று எதுவும் இல்லை. முழு உண்மை, முழு பொய் என்றும் எதுவும் இல்லை. ஒவ்வொரு நபரின் பார்வையும் வேறு. வெள்ளை உடை அணிவது தலைமைப் பண்பு என்று நினைக்கலாம். அதே வெள்ளை உடையை தோல்வியின் அடையாளமாக ஒருவர் கருதலாம். அதனால், மிகச்சரியாக செயலை செய்ய நினைப்பது ஆபத்தான மனநிலை. இப்படி செய்ய நினைப்பவர்கள், தன்னை சுற்றி எல்லோரும் அதேபோன்று இருக்கவேண்டும் என்று கருதுவார்கள். இந்த வட்டம், எல்லை இல்லாமல் வளர்ந்துகொண்டே போகும். இது, மிகச்சரியான ஒரு தவறை உருவாக்கிவிடும்.

எல்லாமே மிகச்சரியாக இருக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இருப்பவர்கள் அதிக மன




அழுத்தம் மற்றும் தோல்வி பயத்திற்கு ஆளாகிறார்கள். நான் சொல்வது அல்லது செய்வது மட்டும்தான் சரி என்ற எண்ணம் மற்றவர்களின் கருத்துகளையும், தனித்துவத்தையும் மதிக்கும் பண்பைக் குறைக்கிறது.

எனவே, இந்த விளையாட்டில் சிக்கிக்கொள்ள வேண்டாம். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மிகச்சரியானதில் இருந்து தப்பிவிடுங்கள். மிகச்சரியானது என்பது ஆணவம். நான் செய்வது மட்டும் சரி, மற்ற எல்லோரும் செய்வது தவறு என்பதே இதில் ஒளிந்திருக்கும் உண்மை. ஒரு இயல்பான மனிதன், தன் வாழ்க்கை மிகச்சரியானதாக இருக்காது என்பதை ஏற்றுக் கொள்வார். நாம் செய்வதற்கு வரையறை உண்டு என்பதை உணர்ந்திருப்பார். அதனால் மிகச்சரியானவனாக இருக்க முயற்சி செய்யாதீர்கள்.

---




**? நவகுஞ்சரம் என்ற விலங்கு உண்மையா..? மகாபாரதம் இதிகாசத்தில் இந்த விலங்கு சொல்லும் தத்துவம் என்ன?**

**– எம்.ஆராவமுதன், ஸ்ரீரங்கம்.**

**ஞானகுரு :**

இயற்கையை முழுமையாக உணர்ந்துகொள்ளும் சக்தி மனிதரின் மூளைக்கு இல்லை என்பதை சொல்வதே நவகுஞ்சரம் என்ற விலங்கின் தத்துவம். வியாசர் எழுதிய பாரதத்தில் இந்த நவகுஞ்சரம் விலங்கு இடம்பெறவில்லை. ஒரிய மொழியில் சரளாதாசர் எழுதிய மகாபாரதத்தில், ஒன்பது வெவ்வேறு விலங்குகளின் உடல் உறுப்புகளைக் கொண்ட ஒரு விசித்திர விலங்காக நவகுஞ்சரம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

சேவலின் தலை, மயிலின் கழுத்து, எருதின் திமில், சிங்கத்தின் இடை, பாம்பின் வால், யானையின் தும்பிக்கை, புலியின் கால், மானின் கால் மற்றும் மனிதக் கையுடன் இருக்கும் விலங்கு ஒடிசா மாநிலத்தின் கலாச்சாரமான, படா சித்ரா ஓவியங்களில் இடம் பெற்றுள்ளது. மகாபாரதத்தில் அர்ஜுனனின் தவத்தைச் சோதிப்பதற்கு நவகுஞ்சரம் மிருகத்தின் வடிவில் ஸ்ரீகிருஷ்ணர் தோன்றியதாகக் கூறப்படுகிறது. அதிசய விலங்கைக் கண்டதும், அதை கொல்வதற்கு வில் எடுக்கும் அர்ஜுனன், அதன் கையில் தாமரைப் பூவைப் பார்த்ததும், அது கிருஷ்ணரின் வடிவம் என்பதை உணர்ந்து வணங்குகிறார்.

மனிதர்களின் அறிவும் கற்பனையும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டதுதான்; ஆனால் இயற்கையின் படைப்பு எல்லையற்றது என்பதை நவகுஞ்சரம் மிருகத்தின் மூலம் அர்ஜுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணர் உணர்த்துகிறார் என்பதே இதன் தத்துவம். ஒடிசாவில் உள்ள புகழ்பெற்ற பூரி ஜெகன்நாதர் கோயிலின் வடக்குப் பகுதியில் நவகுஞ்சர சிற்பம் செதுக்கப் பட்டுள்ளது. இதை உண்மை என்று ஏற்கத் தேவையில்லை, பொய் என்று மறுக்கவும் தேவையில்லை. ரசித்து மகிழுங்கள். ஏனென்றால், இயற்கையின் அற்புதத்தில் இதைவிடவும் பெரிய அதிசயங்கள் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சியுடன் வாழுங்கள்.







# ஞானகுரு பதில்கள்

**? நான் வாங்கித்தரும் சட்டையை என் மகன் போடுவதில்லை. எல்லாம் எனக்குத் தெரியும் என்று மரியாதை இல்லாமல் பேசுகிறான். இந்த தலைமுறையை நினைத்தால் பயமாக இருக்கிறது. என்ன செய்வது..?**

**– என். ரேவதி, சேலம்.**

**ஞானகுரு ;**

மரியாதையை குழந்தையிடம் கட்டாயப்படுத்தி வாங்க முடியாது. அன்பாக வாங்கிக்கொடுத்த சட்டையைப் போடாதது குற்றம் இல்லை. என்னுடைய அன்பை நிராகரித்துவிட்டான் என்று அதை எடுத்துக்கொள்வதுதான் தவறு. அதனால், பிள்ளைக்கு எந்த மாதிரி சட்டை பிடிக்கும் என்று அவனையே தேர்வு செய்யச் சொல்லி வாங்குவதே சரியான தீர்வு.

எல்லாம் எனக்குத் தெரியும் என்பது சில விஷயங்களில் உண்மையாக இருக்கலாம். டெக்னாலஜி மூலம் பெற்றோருக்குத் தெரியாத பல விஷயங்கள் அவர்களுக்குத் தெரியும். அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகச் சொல்லுங்கள். அதேநேரம், அவர்கள் பெற்றோரைவிட புத்திசாலிகள் என்று அர்த்தமில்லை. அனுபவம் அதிகம் என்பதால் பெற்றோர் சொல்வதே சரி என்பதும் உண்மையில்லை.

இந்தத் தலைமுறையை நினைத்து பயப்படத் தேவையில்லை. ஒவ்வொரு தலைமுறையும் அடுத்த தலைமுறையைப் பார்த்து பயந்திருக்கிறது. காலம் கெட்டுப்போச்சு என்பது ராமாயணம் காலத்தில் இருந்து பேசப்படுவதுதான்.

மகனை கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக புரிந்துகொள்வதற்கு நான்கு விஷயங்களைச் செய்யுங்கள்.

- நல்ல விஷயங்களுக்கு மனம் திறந்து பாராட்டுங்கள்.
- குறைவாக அறிவுரை கூறுங்கள்.
- அதிகமாகக் கேளுங்கள், பேச்சுவார்த்தை நடத்துங்கள்.
- பிள்ளையின் கருத்துக்கு மரியாதை கொடுங்கள்.

பிள்ளைகள் பெற்றோர் சொல்வதைக் கேட்காமல் போகலாம். ஆனால், என் கருத்தைக் கேட்பார்கள் என்ற நம்பிக்கை இருந்தால், பெற்றோரை மதிப்பார்கள். பிரச்னை வரும்போது தேடிவருவார்கள். பிள்ளையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது பெற்றோர் வெற்றி அல்ல. நல்ல முடிவு எடுக்கக்கூடியவராக வளர்ப்பதுதான் வெற்றி. மகிழ்ச்சியுடன் வாழுங்கள்.

**? 75 வயது ஆன பிறகும் ரஜினிகாந்த் எதற்கு நடித்துக்கொண்டே இருக்கிறார். நிம்மதியாக மகிழ்ச்சியாக இருக்கலாமே..?**

– என்.விஷால், பொள்ளாச்சி.

ஞானகுரு :

வயது அதிகரித்தவுடன் உடலுக்கு ஓய்வு தேவைப்படலாம். ஆனால் மனதுக்கு எப்போதும் ஓய்வு தேவையில்லை. வேலை செய்வது என்றால் கஷ்டப்படுவது என்றும் ஓய்வு எடுப்பதை மகிழ்ச்சி என்றும் நினைக்கத் தேவையில்லை.

சிலருக்கு பயணம் மகிழ்ச்சி. சிலருக்கு புத்தகம் படிப்பது மகிழ்ச்சி. தோட்ட வேலையில், குடும்பத்தினருடன் இருப்பதில் சிலருக்கு மகிழ்ச்சி இருக்கலாம். இந்த வகையில் சிலருக்கு வேலை செய்வதே மகிழ்ச்சியாக இருக்கும்.

ரஜினிக்கு நடிப்பு என்பது பணம் சம்பாதிக்கும் தொழில் அல்ல. அவரது தனித்தன்மையின் அடையாளம். வயதான காலத்திலும் மனதை உற்சாகமாக வைத்துக்கொள்ள நடிப்பு அவருக்கு உதவலாம்.

ஒருவர் ஓய்வு பெறும் வயதை வேறு ஒருவர் தீர்மானிக்கக்கூடாது. 75 வயதில் ஒருவர் வேலை செய்வதும், 75 வயதில் ஒருவர் முழுமையாக ஓய்வு எடுத்துக்கொள்வதும் அவரவர் விருப்பம்.

வாழ்க்கையின் கடைசி கட்டத்திலும், பணம் சம்பாதிப்பதைவிட வாழ்வதற்குரிய ஆர்வத்தை இழக்காமல் இருப்பது முக்கியம். ரஜினிக்கு நடிக்கத் தெரியும் நடிக்கிறார். அவரை நம்பி 100 கோடி ரூபாய் முதலீடு போடவும் தயாராக இருக்கிறார்கள். அவரை திரையில் பார்க்க கோடிக்கணக்கான ரசிகர்கள் இருக்கிறார்கள். இவரை சூப்பர்ஸ்டார் என்று இந்தியாவே கொண்டாடுகிறது.

வயது என்பது ஒரு எண் மட்டும்தான். அவர் நிறைய ஆபரேஷன் செய்திருக்கிறார். ஆனாலும், 75 வயதில் தள்ளாடாமல் நடக்கிறார் என்றால், மற்ற அனைவருக்கும் அவர் ஒரு ஆரோக்கிய வழிகாட்டி. எனவே, ரஜினியை ஓய்வெடுக்கச் சொல்லாதீர்கள். அவரை பார்த்து முதியவர்கள் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும். ரஜினி எதில் மகிழ்ச்சியைக் காண்கிறாரோ, அதில் அவர் தொடரட்டும். நூறு வயதிலும் இளமையாக வாழட்டும். மகிழ்ச்சியுடன் வாழுங்கள்.




**? வலி, சோர்வில் உடல் ஆரோக்கியக் குறைவை கண்டுபிடிக்கிறோம். அதுபோல், டிப்ரஷனுக்கு அறிகுறிகள் என்ன..?**

– எஸ்.அன்பரசன், சென்னை.

ஞானகுரு :

உடல் நலன் போலவே மன நலனும் ஆரோக்கியத்திற்கு முக்கியம். மனநலம் குறைவதை 10 அறிகுறிகள் மூலம் அறிந்துகொள்ளலாம்.

● வழக்கமாக செய்யும் வேலைகளைச் செய்வது கடினமாக அல்லது குழப்பமாக இருக்கும்.

● நண்பர்கள், உறவினர்கள், குடும்பத்தினருடன் பேசாமல் விலகியிருக்கத் தோன்றும்.



● தன்னம்பிக்கை குறைந்து, நம்மால் எதுவும் செய்யமுடியாது என்ற நெகடிவ் மனநிலை நீடிக்கும்.

● முக்கியமான விஷயங்களிலும் மறதி. எதை எங்கே வைத்தோம் என்பதில் குழப்பம்.

● சின்ன சத்தம் கேட்டாலும் பயம், பதட்டம் தோன்றும்.

● சாதாரணமாக ஒருவர் கேள்வி கேட்டாலும் கிண்டல் செய்வதாகத் தோன்றும். .

● உணவு, தூக்கத்தில் அதிக மாற்றம் ஏற்படும்.

● சிந்தனைகளை கட்டுப்படுத்த நினைத்தாலும் முடியாது.

● தன்னை யாரும் விரும்பவில்லை, தான் யாருக்கும் தேவையில்லை என்ற எண்ணம் வரும்.

● மகிழ்ச்சி தரும் விளையாட்டு, சினிமா போன்ற பொழுதுபோக்குகளும் எரிச்சல் தரும்.

ஒரு சில நாட்கள் இதுபோன்ற மாற்றம் இருப்பது மனநோய் அல்ல. இந்த மாற்றங்கள் தொடர்ந்து நீடிப்பதும், இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதும் உடனடியாக கவனிக்க வேண்டிய அறிகுறி. நம்பகமான நண்பர்கள் அல்லது குடும்பத்தினரிடம் பேசுவதன் மூலம் இந்த பிரச்னையைத் தீர்க்க முடியும். அதன் பிறகும் டிப்ரஷன், ஆன்சைட்டி தொடர்ந்தால் தனியாகப் போராடாமல் கவுன்சிலிங் எடுத்துக் கொள்ளுங்கள். மகிழ்ச்சியுடன் வாழுங்கள்.

**? வீடு என்றால் கணவன், மனைவிக்குள் சண்டை இருக்கத்தானே செய்யும். இது, குழந்தையைப் பாதிக்குமா..?**

– சி.ரித்து குமார், நெய்வேலி.

ஞானகுரு :

பெற்றோர் சண்டையில் பிள்ளைக்கு ரத்தம் வழியும் என்கிறது உளவியல். வீடு என்றால் கணவன், மனைவிக்குள் கருத்து வேறுபாடு வருவது இயல்பு. சண்டை போடுவதும் இயல்பு. ஆனால், அந்த சண்டை எப்படி நடக்கிறது என்பதுதான் பிள்ளையைப் பாதிக்கிறது.



அதாவது கருத்து வேறுபாடு காரணமாக சண்டை போட்டுவிட்டு, கொஞ்ச நேரத்தில் அவர்கள் சகஜமாக பேசத் தொடங்கிவிட்டால், அது பிள்ளையை அதிகம் பாதிக்காது. கருத்து வேறுபாடு வரும், தீர்ந்துவிடும் என்று பிள்ளை கற்றுக்கொள்ளும். ஆனால், சண்டையில் கெட்ட வார்த்தைகள் பயன்படுத்துவது, அவமானப் படுத்துவது, திட்டுவது, பொருட்களை உடைப்பது, பல நாட்கள் பேசாமல் இருப்பது போன்றவை குழந்தையின் மனதில் ஆழமான காயத்தை ஏற்படுத்திவிடும்.

அப்பாவும் அம்மாவும் நிஜமாக அன்பானவர்கள் இல்லை, அடிப்பார்கள், கெட்ட வார்த்தையில் திட்டுவார்கள் என்ற எண்ணம் ஆழமாகப் பதிந்துவிடும். கெட்ட வார்த்தைகளும், கோபமான முகமும் பிள்ளையின் மூளையில் நிரந்தரமாக பதிந்துவிடும். இருவரும் பிரிவார்களா, யாருடைய உயிருக்காவது ஆபத்து வருமா என்ற பயம் உள்ளத்தை வாட்டியெடுக்கும்.

எனவே, பிள்ளையின் முன்பு சண்டை போடாதீர்கள். தவிர்க்க முடியாமல் சண்டையை பிள்ளை பார்த்துவிட்டால் இரண்டு பேரும் சேர்ந்து சமாதானம் செய்யுங்கள். "கருத்து வேறுபாடு காரணமாக இப்படி சண்டை போட்டோம். உண்மையில் நாங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கிறோம். இதில் உன்னுடைய தவறு எதுவும் இல்லை." என்று அன்புடன் சொல்லுங்கள். இதனால் குழந்தைக்கு ஒரு மிகப்பெரிய பாதுகாப்பு உணர்வு கிடைக்கும். மகிழ்ச்சியுடன் வாழுங்கள்.


www.gyaanaguru.com

விரயமாகும் **திருமணச்** செலவுகள்



# முதல் நாள் கல்யாணம் அடுத்த நாள் டைவர்ஸ்

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞராகவும் குடும்பநல நீதிமன்றங்களில் தொடர்ந்து வழக்குகளை கையாள்பவராகவும் இருக்கும் உயர்நீதிமன்ற வழக்கறிஞர், திருமணம் குறித்து எழுதியிருக்கும் பதிவு மிகவும் முக்கியமான ஒன்று. திருமணம் முடிப்பதற்கு லட்சங்களில் செலவழிப்பவர்கள், திருமண உறவைப் புரிந்துகொள்வதற்கு சிறு முயற்சியும் எடுப்பதில்லை என்கிறார்.

முதலில் அவர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

”சில மாதங்களுக்கு முன்பு ஆயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் பிரம்மாண்டமாக நடைபெற்ற அதே திருமணம், சில மாதங்களிலோ அல்லது ஒரு வருடத்திற்குள்ளோ முறிந்து, அதே மணமக்கள் விவாகரத்து கேட்டு நீதிமன்ற வாசலில் நிற்பதை பார்க்கிறேன்.

அப்போது அவர்களின் முகத்தில் திருமண நாளில் இருந்த சிரிப்பு இருப்பதில்லை. கண்களில் கனவுகள் இருப்பதில்லை. இரு குடும்பங்களின் மனதிலும் மகிழ்ச்சி இருப்பதில்லை. இருப்பது வேதனை, ஏமாற்றம், பொருளாதார சுமை மற்றும் எதிர்காலம் குறித்த பயம் மட்டுமே.

## அச்சமூட்டும் கடன்கள்

என்னை இன்னும் அதிகமாக வேதனைப்படுத்துவது என்னவென்றால், திருமணத்திற்காக வாங்கப்பட்ட கடன்கள் அப்போது கூட முடிவடையாமல் இருப்பதுதான். வங்கி கடன்கள் இருக்கும். நகைகள் அடமானத்தில் இருக்கும். தனியார் வட்டிக் கடன்கள் இருக்கும். உறவினர்களிடம் வாங்கிய பணம் திருப்பிக் கொடுக்கப்படாமல் இருக்கும். சேமித்து வைத்திருந்த வாழ்க்கை முழுவதின் சேமிப்பும் காலியாகி இருக்கும்.

வாழ்க்கையை மகிழ்ச்சியாக தொடங்க வேண்டிய நாளே, பல குடும்பங்களுக்கு கடன் வாழ்க்கையின் தொடக்க நாளாக மாறிவிடுகிறது. அதன் பிறகுதான் விவாகரத்து வழக்கு தொடங்குகிறது.

அப்போது நீதிமன்றம் சட்டத்தின் அடிப்படையில் தனது கடமையைச் செய்கிறது. அதாவது, யாருக்கு என்ன உரிமை இருக்கிறது, வருமானம் என்ன, யாருக்கு பராமரிப்புத் தொகை வழங்க வேண்டும், நிரந்தர ஜீவனாம்சம் வழங்க வேண்டுமா,



குழந்தைகளின் எதிர்காலம் எப்படி பாதுகாக்கப்படும் என்பதையெல்லாம் சட்டத்தின் அடிப்படையில் ஆராய்கிறது.

ஆனால் எந்த நீதிமன்றத்தாலும் உடைந்த உறவை மீண்டும் உருவாக்க முடியாது. திருமணத்திற்காக வீணாகச் செலவழிக்கப்பட்ட பணத்தை திரும்பக் கொண்டு வர முடியாது. வட்டிக்கு வட்டி சேர்ந்து பெருகிய கடன்களை அழித்துவிட முடியாது.

### பணத்துக்குத் திண்டாட்டம்

பல பெண்கள், திருமண வாழ்க்கை முறிந்த பிறகு, சட்டப்படி கிடைக்கும் பராமரிப்புத் தொகை, நிரந்தர ஜீவனாம்சம் அல்லது பரஸ்பர சமரசத் தொகையை நம்பியே வாழ்க்கையை மீண்டும் தொடங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். பல நேரங்களில், திருமணத்திற்காக இரு குடும்பங்களும் செய்த அளவுக்கு மீறிய செலவுகளுடன் ஒப்பிடும்போது, அந்தப் பணம் அவர்களின் வாழ்க்கையை முழுமையாக கட்டியெழுப்ப போதுமானதாக இருப்பதில்லை.

அதேபோல், பல ஆண்கள் அந்தச் சட்டப்பூர்வமான நிதிப் பொறுப்புகளை நிறைவேற்ற மீண்டும் கடன் வாங்கவோ அல்லது சொத்துகளை விற்கவோ வேண்டிய நிலையை எதிர்கொள்கிறார்கள். இந்த நிலையை தினமும் பார்க்கும் ஒரு வழக்கறிஞராக, ஒரு கேள்வியை நான் சமுதாயத்திடம் கேட்க விரும்புகிறேன்.

இந்த அளவுக்கு ஆடம்பரம் உண்மையில் யாருக்காக?

ஒரு காலத்தில் திருமணம் என்பது இரண்டு குடும்பங்கள் ஒன்று சேரும் புனிதமான நிகழ்வு. இன்று அது சமூக வலைத்தளங்களில் அதிக பார்வைகள் பெறும் ஒரு நிகழ்ச்சியாக மாறிவிட்டது.

ரீல்ஸ் கலாச்சாரம், திரைப்படங்களின் தாக்கம், வடஇந்திய திருமண கலாச்சாரத்தின் தாக்கம், திருமணத் துறையைச் சுற்றியுள்ள வணிகமயமாக்கல் இவை அனைத்தும் சேர்ந்து, திருமணத்தின் உண்மையான அர்த்தத்தை மாற்றிவிட்டன.

### இதுதான் திருமணமா..?

இன்று ஒரு திருமணம் என்றாலே ப்ரீ வெட்டிங் போட்டோஷூட் வேண்டும். சினிமா தரத்தில் வீடியோ வேண்டும். சேவ் தி டேட் படப்பிடிப்பு வேண்டும். ட்ரோன் கேமரா வேண்டும். மெஹந்தி விழா வேண்டும். சங்கீத் இரவு வேண்டும். ஹல்தி விழா வேண்டும். பேச்சுலர் பார்ட்டி வேண்டும். பிரம்மாண்ட மேடை வேண்டும். ஆயிரக்கணக்கான மலர் அலங்காரங்கள் வேண்டும். டிசைனர் உடைகள் வேண்டும். திரைப்படக் காட்சிகளைப் போன்ற மணமக்கள் வருகை வேண்டும். இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் வேண்டும். யூடியூப் வெட்டிங் ஃபிலிம் வேண்டும்.

இவற்றில் எதுவும் தவறு என்று நான் கூறவில்லை. ஆனால் இவற்றுக்கு கடன் வாங்குவது தவறு. பிள்ளைகளின் எதிர்கால சேமிப்பை காலி செய்வது தவறு. பெற்றோரின் முதிய வயது பாதுகாப்பை இழப்பது தவறு. ஒரு நாள் நிகழ்ச்சிக்காக பல ஆண்டுகள் வட்டிக் கடன் சுமப்பது தவறு.

இவை அனைத்திலும் மிக முக்கியமான உண்மை என்னவென்றால், இந்த நிகழ்ச்சிகளில் ஒன்றுகூட எந்த மதத்திலும் கட்டாயமில்லை. எந்த இந்தியச் சட்டத்திலும் கட்டாயமில்லை.

இந்து மதம் திருமணத்தை ஒரு புனித சம்ஸ்காரமாகக் கருதுகிறது. இஸ்லாம் திருமணத்தை எளிமையாக நடத்துவதே சிறந்தது என்று போதிக்கிறது. கிறிஸ்தவம் திருமணத்தை இறைவனுக்கு முன்பாக ஏற்படுத்தப்படும் புனித உடன்படிக்கையாகக் கருதுகிறது. மூன்று மதங்களிலும் முக்கியமானது உறவு. ஆடம்பரம் அல்ல.

## மந்திரச்சொல்

வயதாகிவிட்டது என்று கவலைப்படாதீர்கள். கவலைப்படுபவர்களுக்கு மட்டுமே வயதாகிறது.

> திருமண மேடை எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும் என்று எந்தச் சட்டமும் கூறவில்லை. எத்தனை வகை விருந்து வைக்க வேண்டும் என்று எந்தச் சட்டமும் கூறவில்லை. மெஹந்தி நடத்த வேண்டும். சங்கீத் நடத்த வேண்டும். பேச்சுலர் பார்ட்டி நடத்த வேண்டும். கோடிக்கணக்கில் அலங்காரம் செய்ய வேண்டும் என்று எந்தச் சட்டமும் கூறவில்லை.

### சட்டம் என்ன சொல்கிறது?

Hindu Marriage Act, 1955, Special Marriage Act, 1954, Indian Christian Marriage Act, 1872 மற்றும் முஸ்லிம் தனிநபர் சட்டக் கொள்கைகள் அனைத்தும் திருமணம் எவ்வாறு சட்டபூர்வமாக நடைபெற வேண்டும் என்பதையே கூறுகின்றன. திருமணம் செல்லுபடியாக இருக்க வேண்டிய வயது என்ன? இருவரின் சம்மதம் இருக்கிறதா? சட்டப்படி திருமணம் நடைபெற்றுள்ளதா? பதிவு செய்ய வேண்டிய அவசியம் உள்ளதா? இவையெல்லாம் சட்டம் பார்க்கிறது.

திருமண மேடை எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும் என்று எந்தச் சட்டமும் கூறவில்லை. எத்தனை வகை விருந்து வைக்க வேண்டும் என்று எந்தச் சட்டமும் கூறவில்லை. மெஹந்தி நடத்த வேண்டும். சங்கீத் நடத்த வேண்டும். பேச்சுலர் பார்ட்டி நடத்த வேண்டும். கோடிக்கணக்கில் அலங்காரம் செய்ய வேண்டும் என்று எந்தச் சட்டமும் கூறவில்லை.

திருமண வாழ்க்கையில் பிரச்சினை ஏற்பட்டால் கூட நீதிமன்றம் திருமண நாளில் எவ்வளவு செலவு செய்தீர்கள் என்று கேட்டு தீர்ப்பு வழங்குவதில்லை. கணவன் மனைவியின் வருமானம். அவர்களின் பொருளாதார நிலை. வாழ்க்கைத் தேவைகள். குழந்தைகளின் நலன். வழக்கின் தனிப்பட்ட சூழ்நிலைகள்


www.gyaanaguru.com

ஆகியவற்றின் அடிப்படையில்தான் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

## செலவுக்கு நீதிமன்றத்தில் மதிப்பில்லை

Hindu Marriage Act, 1955-ன் Section 13 விவாகரத்திற்கான காரணங்களை வகுக்கிறது. Sections 24 மற்றும் 25 வழக்கு நடைபெறும் காலத்திற்கான பராமரிப்புத் தொகை மற்றும் நிரந்தர ஜீவனாம்சம் வழங்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கின்றன. Special Marriage Act, 1954-ன் Sections 36 மற்றும் 37 இதேபோன்ற பாதுகாப்புகளை வழங்குகின்றன. கிறிஸ்தவர் களுக்கு Indian Divorce Act, 1869 பொருந்துகிறது.

மேலும், பொருளாதார ரீதியாக தன்னைத் தானே பராமரிக்க முடியாத மனைவி, குழந்தைகள் அல்லது பெற்றோருக்கு Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023-ன் Section 144ன் கீழ் பராமரிப்புத் தொகை கோரும் உரிமையும் உள்ளது. இந்தச் சட்டங்கள் அனைத்தும் ஒரு விஷயத்தை மட்டுமே பாதுகாக்கின்றன. மனிதர்களை, அவர்களின் உரிமைகளை, அவர்களின் வாழ்க்கையை மட்டுமே பாதுகாக் கின்றன. ஆடம்பரத்தை கணக்கிடுவதில்லை.

எனவே, ஒரு வழக்கறிஞராக அல்ல, தினமும் உடைந்த குடும்பங்களை நேரில் பார்க்கும் ஒரு மனிதராக நான் சமூகத்திடம் ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். திருமணத்தை ஆடம்பரமாக அல்ல, அர்த்தமுள்ளதாக நடத்துங்கள். ஒரு நாள் புகைப்படத்திற்காக உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை அடமானம் வைக்காதீர்கள். அந்தப் பணத்தை அவர்களுக்கான வீட்டிற்காக சேமியுங்கள். அவர்களின் தொழிலுக்காக முதலீடு செய்யுங்கள். அவர்களின் குழந்தைகளின் கல்விக்காக வைத்திருங்கள். அவர்களின் வாழ்க்கை நிம்மதியாக தொடங்குவதற்கு பயன்படுத்துங்கள்..” என்று கூறியிருக்கிறார்.

## ஞானகுரு ஆலோசனை

திருமணத்துக்கு ஆடம்பரச் செலவு தேவையில்லை என்பது நூறு சதவீதம் உண்மை. அதேநேரம், எல்லோரும் இதை தவிர்க்க வேண்டியது அவசியம் இல்லை. ஏனென்றால், இது வாழ்நாளில் ஒரு நாள் மட்டுமே வரக்கூடிய நிகழ்வு. திருமணம் சக்சஸ் ஆகும்போது, இந்த நாளை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்ப்பதற்கும், மகிழ்ச்சி அடைவதற்கும் இந்த நினைவுகள் தேவைப்படுகிறது.

ஆனால், பணம் செலவழிப்பதில் மூன்று கட்டுப்பாடுகள் வேண்டும். முதலாவது, செலவழிக்கப்படும் பணத்தில் பாதி அளவாவது

www.gyaanaguru.com

விரயமாகும்
**திருமணச்**
செலவுகள்



மணமகன், மணப்பெண் சொந்தமாக உழைத்து சம்பாதித்ததாக இருக்க வேண்டும். இரண்டாவது, சேமித்த பணத்தை செலவு செய்யலாம். எந்த காரணம் கொண்டும் கடன் வாங்கி செலவழிக்கக்கூடாது.

மூன்றாவது, மாப்பிள்ளை அல்லது பெண் வீட்டார் செலவு செய்வது அவர்களுடைய சொந்த விருப்பமாக இருக்க வேண்டும். எந்த காரணம் கொண்டும், அடுத்தவர் நிர்ப்பந்தத்திற்காக அல்லது பெருமையைக் காட்டுவதற்காக செலவு செய்யக்கூடாது.

திருமணம் வெற்றி அடைவதற்கும் செலவுகளுக்கும் எந்த தொடர்பும் கிடையாது. எனவே, திருமணம் முடிப்பதற்கு முன்பு இரண்டு பேரும் மனப்பூர்வமாகப் பேசிப் பழக வேண்டும். கண்டிப்பாக ஒரு கவுன்சிலிங் எடுத்துக்கொள்ள வேண்டும்.

திருமணத்திற்குப் பிறகு சுதந்திரம், பணம், உறவுகள் குறித்த எல்லைகள் குறித்து இருவரும் பேசிக்கொள்ள வேண்டும். இந்த பேச்சுவார்த்தையில் இருவருக்கும் ஒற்றுமை ஏற்படவில்லை என்றால் திருமணத்தை எந்த தருணத்திலும் நிறுத்திவிடலாம் எனும் அளவுக்கு மணமக்களுக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டும். இந்த திருமணம் இருவரின் பரிபூரண சம்மதம், விருப்பத்தின் அடிப்படையில் நடக்க வேண்டும்.

அப்போதுதான், திருமண வாழ்க்கை நெருக்கடி இல்லாமல் தொடங்கும், தொடரும்.



1 ஓர் ஆண்டு சந்தா
500 ரூபாய்
செலுத்திவிட்டீர்களா..?

மனதுக்கு சந்தோஷம் தரும் ஞானகுரு மகிழ்ச்சி, உடலுக்கு ஆரோக்கியம் தரும் ஞானகுரு யாக்கை மின்னிதழ்களைப் பெறுவதற்கு ஆண்டு சந்தா ரூ.500 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வங்கி எண் அல்லது மொபைல் எண்ணுக்கு சந்தா அனுப்பி ஆதரவு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.




செல்போன் : 7299753999

வங்கிக் கணக்கு: GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA, IFS CODE : UBIN0554847, Current Accout No. 548401010050639




க்யூஆர் கோடு மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பியதற்கான ஆதாரத்துடன் தங்களுடைய வாட்ஸ் ஆப் எண் அல்லது இமெயில் முகவரியை மேற்கண்ட செல்போனுக்கு அனுப்பிவையுங்கள். இதழ் தொடர்ந்து அனுப்பப்படும்.

www.gyaanaguru.com

# உயிர்த்துணை

## தம்பதியர் ஒற்றுமைக்கு

உளவியல் ஆலோசனைகள்




விலை ₹ 225/-

**ஞானகுரு**
பதிப்பகம்

**80725 89355**

எண்ணுக்கு பணம், முகவரி அனுப்புங்கள். எங்கள் செலவில் புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.